செ.வெ.எண்: 206 தேதி: 04.03.2010

செய்தி வெளியீடு – 04.03.2010

## தமிழகச் சட்டமன்ற சரித்திரத்தில் 50 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றிவரும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய உருவப் படத்தை புதிய மற்றும் பழைய சட்டமன்ற வளாகங்களில் திறந்து வைத்திட அமைச்சரவையில் தீர்மானம்

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற அனைத்து சட்டமன்றத் தேர்தல்களிலும் வெற்றி பெற்று, தமிழகச் சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராக 50 ஆண்டு காலத்திற்கும் மேலாகத் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராக இருப்பதுடன், 1967 ஆம் ஆண்டு முதன்முறையாக அமைச்சராகவும், 1969 ஆம் ஆண்டில் முதன்முறையாகத் தமிழக முதலமைச்சராகவும் பொறுப்பேற்று, 2006 ஆம் ஆண்டு முதல் ஐந்தாம் முறையாகத் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பு வகித்து, ஜனநாயகத்தைக் கட்டிக்காத்து வருவதுடன், தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் சீரிய முறையில் கடமையாற்றி வரும் ஒப்பற்றத் தலைவர் கலைஞர் அவர்களை ஜனநாயகத்தின்பால் பற்று கொண்ட அனைவரும் பெரிதும் பாராட்டுகின்றனர்.

ஜனநாயக நெறிமுறைகளை அரசியலிலும், ஆட்சியிலும் கடைபிடித்து வருவதுடன், தமிழக மக்களின் வாழ்க்கைத் தரம் உயர தொலைநோக்குப் பார்வையுடன் திட்டங்கள் தீட்டிப் பணியாற்றி வருபவர் தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள்.

தமிழகத்தின் வரலாற்றில் அழிக்க முடியாத இடத்தைப் பெற்று, அரும்பணியாற்றி வரும் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தமிழகச் சட்டமன்றப் பேரவைக்குப் புதிய வளாகம் அமைத்து, 13–3–2010 அன்று திறப்பு விழா காணவிருக்கின்றார்.

இந்நிலையில், "தமிழகச் சட்டமன்ற சரித்திரத்தில், 50 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி இந்த மாமன்றத்திற்குச் சிறப்பு சேர்த்து வரும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய உருவப் படத்தை, புதிய சட்டமன்ற வளாகத்திலும், பழைய சட்டமன்ற வளாகத்திலும் திறந்து வைப்பது'' என்ற தீர்மானம் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள் முன்மொழிய, மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் திரு.க. அன்பழகன் அவர்கள் வழிமொழிய, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

*வெளியீடு, இயக்குநர்,*
*செய்தி, மக்கள் தொடர்புத் துறை,*
*தலைமைச் செயலகம், சென்னை-9*